நிதித்துறை

# தமிழ்நாட்டின் நிதி மேலாண்மை குறித்த வெள்ளை அறிக்கை

பொது நிதி நிலை குறித்த ஓர் ஆய்வு: 2021-22 முதல் 2025-26 வரை

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கக்காட்சி

## செய்தியாளர்கள் சந்திப்பு

# இந்த வெள்ளை அறிக்கையின் நோக்கம் என்ன?

**தமிழ்நாட்டின் நிதிநிலையைக் குறித்த மக்களுக்கான வெளிப்படையான மற்றும் ஆதாரப்பூர்வ அறிக்கை**

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை*

*– திருக்குறள் 478*

**"பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால், அதனால் தீங்கு இல்லை."**

## அறிக்கையின் தன்மை

நிதித் தரவுகளின் அடிப்படையில் வெளிப்படையான, ஆதாரங்களுடனான ஓர் ஆய்வு. கடந்த காலத்தைக் குறை கூறுவதோ அல்லது அரசியல் ரீதியான கூற்றோ அல்ல. நேர்மையுடன் தமிழ்நாட்டு மக்கள் முன்னர் வைக்கப்படும் அறிக்கை.

## ஆய்வுக்குரிய காலக்கட்டம்

1. கோவிட் பெருந்தொற்றுக்குப் பிந்தைய ஐந்தாண்டு காலக்கட்டம்: 2021-22 முதல் 2025-26 வரை.
2. அடிப்படை ஆண்டு: பெருந்தொற்று ஆண்டான 2020-21.
3. இடைக்கால வரவு-செலவுத் திட்டம் 2026-27 - ஒரு பார்வை
4. ஒப்பிடப்பட்டுள்ள இணை மாநிலங்கள் : கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத்.

## ஆய்வு முடிவுகள்

1. கடந்த ஐந்தாண்டு கால நிதிநிலை வீழ்ச்சியானது தொடர் மற்றும் கட்டமைப்பு காரணங்களைச் சார்ந்தது.
2. பிற இணை மாநிலங்கள் கோவிட் பெருந்தொற்றுக்கு பிந்தைய மீட்சிக் காலத்தை தங்களின் நிதிநிலையை சீரமைப்பதற்கு பயன்படுத்திக் கொண்ட வேளையில், தமிழ்நாட்டின் நிதி நிலைக் குறியீடுகள், அதற்கு எதிர் திசையிலேயே நகர்ந்துள்ளன.

## மூன்று முக்கியப் போக்குகள் (2021–22 முதல் 2025–26 வரை)

1. மொத்தக் கடன்கள் 5 இலட்சம் கோடி ரூபாயிலிருந்து ஏறத்தாழ 10 இலட்சம் கோடி ரூபாய் என இருமடங்காக உயர்ந்துள்ளது.
2. வருவாய்ப் பற்றாக்குறையானது கோவிட் பெருந்தொற்று ஆண்டை விடவும் அதிகரித்து வரலாறு காணாத உச்சத்தினை அடைந்துள்ளது.
3. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது- ஒரு காலத்தில் இந்தியாவின் முதன்மை வருவாய் ஈட்டும் மாநிலமாகத் திகழ்ந்த தமிழ்நாடு, தற்போது சராசரிக்கும் கீழே சரிந்துள்ளது.

# ஐந்தாண்டு நிதிநிலை–ஒரு பார்வை: 2021–22 முதல் 2025–26 வரை (முதல்நிலைக் கணக்குகள்)

**கோவிட் பெருந்தொற்றுக்குப் பிந்தைய இக்காலக்கட்டத்தில், ஒவ்வொரு முக்கிய நிதி நிலைக் குறியீடுகளிலும் தமிழ்நாடு சரிவைச் சந்தித்துள்ளது – ஒவ்வொரு குறியீட்டிலும் தமிழ்நாடு தனது வரலாற்றிலேயே மிகக் குறைந்த அல்லது அதற்கு நெருக்கமான அளவினையே பதிவு செய்துள்ளது.**

| குறியீடு | தொடக்க ஆண்டு 2021–22 | இறுதி ஆண்டு 2025–26 (முதல்நிலைக் கணக்கு) | போக்கு | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| வருவாய்ப் பற்றாக்குறை (Revenue Deficit) (ரூபாய் கோடியில்) | 46,538 | 78,324 | மோசமடைந்துள்ளது | முன் எப்போதும் இல்லாத உச்சம். கோவிட் ஆண்டைக் காட்டிலும் மிக அதிகம் |
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் (Revenue Deficit / GSDP) | 2.25% | 2.22% | மோசமடைந்துள்ளது | நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தின் வரம்பு மீறப்பட்டது |
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சொந்த வரி வருவாய் சதவீதம் (SOTR/ GSDP) | 5.93% | 5.45% | சரிந்துள்ளது | இதுவரை இல்லாத குறைந்தளவு |
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மொத்த நிலுவைக் கடன் சதவீதம் (Outstanding Liabilities / GSDP) | 28.7% | 28.3% | நிதிநிலை வலுப்படுத்தப்படவில்லை | நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமைச் சட்டத்தின் வரம்பான 25.2% –ஐ விட அதிகம் |
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மூலதனச் செலவின சதவீதம் (CapEx / GSDP) | 1.79% | 1.44% | சரிந்துள்ளது | இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவு |
| மொத்த வருவாய் வரவினத்தில் பொறுப்பேற்ற/தவிர்க்க இயலாத செலவின சதவீதம் (Committed Expenditure / TRR) | 60.4% | 64.4% | உயர்ந்து வருகிறது | இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த அளவு |
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் (Fiscal Deficit / GSDP) | 3.56% | 3.77% | வரம்பு மீறப்பட்டுள்ளது | நிதிநிலை நிர்வாகப் பொறுப்புடமைச் சட்டம் வரையறுத்துள்ள 3% வரம்பு ஒவ்வொரு ஆண்டும் மீறப்பட்டுள்ளது. |

# ஆறு முக்கியத் தரவுகள் – ஓர் பார்வை

**தமிழ்நாட்டின் நிதி நிலைக் குறியீடுகள்: இன்றைய நிலை | நிதி ஆண்டு 2025–26 (முதல்நிலைக் கணக்குகள்)**

## 10 இலட்சம் கோடி ரூபாய்

மொத்த நிலுவைக் கடன் – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் – 28.3%

P

## 78,324 கோடி ரூபாய்

வருவாய்ப் பற்றாக்குறை – வரலாற்றிலேயே இதுவரை இல்லாத உச்சம்

## 5.45%

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம்– மிகக் குறைந்த அளவு
(SOTR / GSDP)

## 22.8%

மொத்த வருவாய் வரவுகளில் வட்டிச் செலவினத்தின் சதவீதம்
(Interest Payments / TRR)

## 64.4%

மொத்த வருவாய் வரவுகளில் பொறுப்பேற்ற/தவிர்க்க இயலாத செலவினத்தின் சதவீதம்
(Committed Expenditure / TRR)


## 13.18 இலட்சம் கோடி ரூபாய்

உண்மையான கடனளவு (அரசு பொதுத் துறை நிறுவனங்களின் கடன் பொறுப்புகளை உள்ளடக்கியது)

# ஆய்வு முடிவு 1: கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ இருமடங்காகியுள்ள கடனளவு

**ரூ.5.13 இலட்சம் கோடி (2020–21) → ரூ.10.00 இலட்சம் கோடி (2025–26 முதல்நிலைக் கணக்குகள்) | கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 14.3% | தனிநபர் மீதான கடன்: ரூ.1,28,934**

**நிலுவையில் உள்ள கடன் (ரூ. இலட்சம் கோடி)**




## மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம்: இணை மாநிலங்களுடனான ஒப்பீடு (2025–26 திருத்தய மதிப்பீடு)

| மாநிலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் | போக்கு |
|---|---|---|
| குஜராத் | 17.6% | சீரானது |
| மகாராஷ்டிரா | 19.7% | நிலைத்துள்ளது |
| கர்நாடகா | 23.4% | குறைந்து வருகிறது |
| தமிழ்நாடு (மு.நி.க) | 28.3% | மிக அதிக அளவு |

### தனிநபர் மீதான கடன்: ரூ.1,28,934 (2025–26 மு.நி.க.)

- 2020-21ல் 67,087 ரூபாயாக இருந்த, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிநபர் மீதான கடன், 92 சதவீதம் வளர்ச்சியைக் கண்டு, 2025-26 ஆம் ஆண்டில் ரூ.1,28,934 ஆக உயர்ந்துள்ளது.
- இணை மாநிலங்களில் தனிநபர் மீதான கடன் மிகக் குறைந்தளவிலேயே உள்ளது. தமிழ்நாட்டில் பிறக்கும் ஒரு குழந்தை, இணை மாநிலங்களை விட மிக அதிகமான கடன் சுமையுடன் பிறக்கிறது.


### 5 ஆண்டுகளில் பெறப்பட்ட கடன் > முதல் 60 ஆண்டுகளில் பெறப்பட்ட நிலுவையில் உள்ள கடன்

- 2021-26 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூ.4.87 இலட்சம் கோடி கடன் பெறப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்த ஐந்தாண்டு கால கடனானது, மாநிலம் தனது முதல் அறுபது ஆண்டு காலத்தில் திரட்டிய கடனை விட அதிகமாகும்.
- மூலதனச் செலவினங்களின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.3% ஆக உள்ள நிலையில், கடன் வளர்ச்சி விகிதம் 14.3% ஆக உள்ளது – முதலீடு செய்வதற்காக அல்லாமல், அன்றாட செலவுகளுக்காகக் கடன் பெறுவதை இது குறிக்கிறது.

# ஆய்வு முடிவு 2 : வட்டிச் செலவினத்தால் குறையும் மூலதனச் செலவினங்கள்

**வட்டி–ரூ.67,050 கோடி, ரூ.50,911 கோடி மூலதனச் செலவினம் (2025–26 மு.நி.க.) | விகிதம் 1.32:1 | ஐந்து ஆண்டுகளில் வட்டிச் செலவினத்தின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 13%**

## வருவாயில் வட்டிச் சுமையின் சதவீதம்




## மொத்த வருவாய் வரவுகளில் வட்டி விகிதம்: இணை மாநிலங்களுடனான ஒப்பீடு (2025–26 திருத்திய மதிப்பீடு)

| மாநிலம் | மொத்த வருவாய் வரவுகளில் வட்டி விகிதம் |
|---|---|
| தமிழ்நாடு (மு.நி.க.) | 22.8% |
| கர்நாடகா | 16.4% |
| குஜராத் | 12.0% |
| மகாராஷ்டிரா | 10.3% |

### வட்டி > மூலதனச் செலவினம் (2017–18 ஆம் ஆண்டு முதல்)

- 2025-26(மு.நி.க.): வட்டி ரூ.67,050 கோடி, மூலதனச் செலவினம் ரூ.50,911 கோடி.
- மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும், ரூ.1.32, கடனுக்கான வட்டியை செலுத்துவதற்கே செலவாகிறது.
- 2017-18 ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்த நிலை மாற்றம் ஏற்பட்டது. அது ஒவ்வொரு ஆண்டும் விரிவடைந்து வருகிறது.


### வட்டிச் செலவினம்: ஐந்தாண்டுகளில் 61% அதிகரிப்பு

- ரூ.41,564 கோடி (2021-22) → ரூ.67,050 கோடி (2025-26 மு.நி.க.): 61% அதிகரிப்பு.
- தற்போது, வட்டியானது மொத்த வருவாயில் 22.8 சதவீதத்தையும், சொந்த வரி வருவாயில் 34.8 சதவீதத்தையும் எடுத்துக்கொள்கிறது.
- சொந்த வரி வருவாயில் ஏறத்தாழ மூன்றில் ஒரு ரூபாய், எந்தவொரு ஒதுக்கீட்டிற்கும் முன்பாக, முழுவதுமாக கடனுக்கான வட்டியைச் செலுத்துதலுக்கே செல்கிறது.

# ஆய்வு முடிவு 3: வருவாய் பற்றாக்குறை – இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகம்

**2025–26 (மு.நி.க.) ல் ரூ.78,324 கோடி (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2.22%) | கோவிட் பெருந்தொற்று ஆண்டை மிஞ்சியது | அரசு முதலீடு செய்வதற்கு அல்லாமல், அன்றாடச் செலவுகளுக்காக கடன் பெறுகிறது.**

## வருவாய் பற்றாக்குறை (ரூ. கோடி)





## வருவாய்க் கணக்கு: இணை மாநிலங்களுடனான ஒப்பீடு (2025–26 திருத்திய மதிப்பீடு)

| மாநிலம் | நிலை (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் %) |
|---|---|
| குஜராத் | + 0.8% (உபரி) |
| மகாராஷ்டிரா | – 0.7% |
| கர்நாடகா | – 0.8% |
| தமிழ்நாடு (மு.நி.க.) | – 2.2% |

# ஆய்வு முடிவு 4: சரிவுப்பாதையில் மாநில சொந்த வரி வருவாய் – ஒரு கொள்கைத் தோல்வி

**மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் விகிதம்: 2025–26–ல் (முதல்நிலைக் கணக்குகள்) 5.45% – இது இதுவரை இல்லாத மிகக் குறைந்த அளவு | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மொத்த வருவாய் வரவினத்தின் விகிதம் 2021–22–ல் இருந்த ஏறத்தாழ 10% சதவீதத்திலிருந்து 2025–26 இல் (மு.நி.க.) 8.32 சதவீதமாகக் குறைந்துள்ளது.**

## மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் விகிதம் (%)




### சரக்கு மற்றும் சேவை வரி: இழப்புகள் மற்றும் அமைப்புசார் ஊழல்

- வணிக வரிகள் துறையில் நிலவும் அமைப்பு சார் ஊழல் காரணமாக கணிசமான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் சரக்கு மற்றும் சேவை வரி வளர்ச்சி மிகவும் குறைவாக உள்ளது.

### முத்திரைத் தாள் கட்டணம்: சந்தை மதிப்பை விடக் குறைவு

- சந்தை நிலவரத்தைப் பின்பற்றும் வகையில் வழிகாட்டு மதிப்புகள் திருத்தப்படவில்லை. சொத்துப் பதிவில் இழக்கும் வருவாய் தொடர்ந்து அதிகமாக உள்ளது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் முத்திரைத் தாள் வருவாய் விகிதம் சரிவுப் பாதையில் உள்ளது.

### ஆயத்தீர்வை வருவாய்: இணை மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறுகிய கட்டமைப்பு

- இணை முறைசாரா பொருளாதாரம் – வருவாயின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9.5%, கர்நாடகாவின் 11.7% உடன் ஒப்பிடுகையில் இணை மாநிலங்களில் மிகவும் குறைவான வளர்ச்சியாகும்.

### கனிமவளத் துறையில் வருவாய் இழப்பு– ஒரு வெளிப்படையான இரகசியம்

- பெருமளவு கனிமவள ஆதாரங்களை கொண்டுள்ள போதிலும், இத்துறையின் மூலம் பெறப்படும் வருவாய் பெரிய அளவில் மாற்றமின்றியே உள்ளது. கனிமவளத் துறையில் நடந்த ஊழலும், வருவாய் இழப்பும் அனைவருக்கும் தெரிந்த இரகசியம்.

# வருவாய் வரவினங்கள் : ஒன்றிய அரசிடமிருந்து கிடைக்கும் நிதிப் பகிர்வில் உள்ள மந்த நிலை

ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு, 10வது நிதிக்குழுவில் 6.64 சதவீதமாக இருந்தது – 16வது நிதிக்குழுவில் 4.097 சதவீதமாகக் குறைந்துள்ளது.. மொத்தமாக 38 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது.

### ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வில் மாநிலங்களின் பங்கு – கூட்டு வருடாந்திர வளர்ச்சி (CAGR) விகிதம் (2021-22 ஆம் ஆண்டு முதல் 2025-26ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வரை)

- மகாராஷ்டிரா: 54,318 கோடி ரூபாய் → 87,994 கோடி ரூபாய் | CAGR: 12.82%
- குஜராத்: 31,106 கோடி ரூபாய் → 48,448 கோடி ரூபாய் | CAGR: 11.71%
- கர்நாடகா: 33,284 கோடி ரூபாய் → 50,802 கோடி ரூபாய் | CAGR: 11.15%
- தமிழ்நாடு: 37,459 கோடி ரூபாய் → 56,819 கோடி ரூபாய் (மு.நி.க.) | CAGR: 10.98% – மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம்

### ஒன்றிய அரசின் மானியங்கள் – கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (2021-22 ஆம் ஆண்டு முதல் 2025-26ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வரை)

- மகாராஷ்டிரா: 38,760 கோடி ரூபாய் → 68,000 கோடி ரூபாய் | CAGR: +15.09%
- குஜராத்: 24,028 கோடி ரூபாய் → 22,036 கோடி ரூபாய் | CAGR: -2.14%
- கர்நாடகா: 29,962 கோடி ரூபாய் → 16,000 கோடி ரூபாய் | CAGR: -14.52%
- தமிழ்நாடு: 35,051 கோடி ரூபாய் → 18,078 கோடி ரூபாய் (மு.நி.க.) | CAGR: -15.26% – மிக மோசமான சரிவு

### மேல்வரி & கூடுதல் கட்டணங்கள் – குறைந்துவரும் பகிர்ந்தளிக்கக்கூடிய நிதி

- மேல்வரி & கூடுதல் கட்டணங்கள் ஆகியவை ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் அதிகரித்து வருகின்றன. ஆனால், இவை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை. இதனால், நிதிப் பகிர்வின் அளவும் குறைகிறது. இது அனைத்து மாநிலங்களையும், குறிப்பாகக் குறைந்த நிதிப் பகிர்வு பங்கினைப் பெற்றுள்ள தமிழ்நாட்டினையும் கடுமையாகப் பாதிக்கிறது.


## ஒட்டுமொத்த வருவாய் வரவுகளில் வீழ்ச்சி

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மொத்த வருவாய் வரவுகளின் பங்கு 2021-22ஆம் ஆண்டில் ஏறத்தாழ 10.0 சதவீதமாக இருந்த நிலையில் 2025-26-ஆம் ஆண்டில் (முதல்நிலைக் கணக்குகளின் படி) 8.32 சதவீதமாகக் குறைந்துள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 0.48 சதவீதப் புள்ளிகள் வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் மட்டுமன்றி, ஒன்றிய அரசிடமிருந்து கிடைக்கும் நிதிப் பகிர்வின் வளர்ச்சி மந்தமானதும், இந்த வீழ்ச்சிக்கு காரணம். இதன் விளைவு: வருவாய் வரவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி, புதிய திட்டங்களை செயல்படுத்த கூடுதல் கடன் பெற வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது என்பது, ஆய்வு முடிவு-1 ல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

# ஆய்வு முடிவு 5: பொறுப்பேற்றச் செலவினம் – மொத்த வருவாய் வரவினங்களில் 64.4 சதவீதம்

**சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலவுகள் 2025–26ஆம் ஆண்டில் (மு.நி.க) 1,89,115 கோடி ரூபாய். இணை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மிக உயர்ந்த பொறுப்பேற்றச் செலவின விகிதம்.**

## பொறுப்பேற்றச் செலவினம் ( '000 கோடி ரூபாய்) – அடுக்கு




## பொறுப்பேற்ற / தவிர்க்க இயலாத செலவினம் / மொத்த வருவாய் வரவுகள்:

| மாநிலம் | பொறுப்பேற்றச் செலவினம்/ மொத்த வருவாய் வரவுகள் | விருப்பத் தீர்வு நிதி |
|---|---|---|
| கர்நாடகா | 44.6% | 55.4% |
| குஜராத் | 44.6% | 55.4% |
| மகாராஷ்டிரா | 49.3% | 50.7% |
| தமிழ்நாடு | 61.7% | 38.3% |

### வரவு–செலவுத் திட்டம் தயாரிப்பு தொடங்குவதற்கு முன்னரே சுமார் 87 சதவீதம் வருவாய், பொறுப்பேற்ற / தவிர்க்க இயலாத செலவினங்களுக்கு நிர்ணயம்

- சம்பளங்கள்/ஓய்வூதியங்கள்/ வட்டி (64.4%) ஆகியவை தவிர, சட்டப்படி வழங்க வேண்டிய மானியங்கள், மத்திய நிதியுதவி திட்டங்களுக்கான மாநிலப் பங்கு மற்றும் பிற கட்டாய செலவினங்கள் கூடுதலாக சுமார் 23 சதவீதம் வரை எடுத்துக்கொள்கின்றன. வெறும் ~13 சதவீதம் மட்டுமே மாநிலத்தின் திட்டங்களுக்கு செலவு செய்ய இருப்பில் உள்ள நிதி. புதிய திட்டங்களை கூடுதல் கடன் இல்லாமல் செயல்படுத்த மீதமுள்ள நிதி போதுமானதாக இல்லை.


### புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கான பொறுப்பு – தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்

- தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம்): உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் = கடைசியாகப் பெற்ற ஊதியத்தின் 50 சதவீதம் + அகவிலைப்படி .
- ஒருமுறை மாற்று நிதி : ஏறத்தாழ ரூ.13,000 கோடி.
- ஆண்டுக்கு சுமார் 5,000 கோடி ரூபாய் தொடர் கூடுதல் செலவினம்: இது ஆண்டுக்கு 10 சதவீதம் அதிகரிக்கும்.
- ஏற்கனவே மிக வேகமாக அதிகரித்து வரும் ஓய்வூதிய செலவினங்களுடன், இது ஒரு கூடுதல் செலவினமாக அமையும்.

# மூலதனச் செலவினம் – இணை மாநிலங்களைவிட மிகக் குறைவு

**மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவினம் 1.44 சதவீதம் | மொத்த செலவினத்தில் 11.8 சதவீதம் – இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த நிலை.**

### மூலதனச் செலவினம்/ மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (%) – இணை மாநிலங்களுடன் ஒப்பீடு 2025-26 (திருத்திய மதிப்பீடு)




### கடனளவு மூலதனச் செலவினத்தை விட இரட்டிப்பு வேகத்தில் அதிகரிக்கிறது

- கடன் கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதம் 14.3 சதவீதமாகவும் , மூலதனச் செலவின் கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதம் 8.3 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு 1 ரூபாய் புதிய மூலதனச் செலவிற்கும் 2.26 ரூபாய் புதிய கடன் பெறப்படுகிறது.

### மூலதன வாய்ப்பு இழப்பு : சுமார் 28,217 கோடி ரூபாய் (2023-26)

- தமிழ்நாடு 2021-22ஆம் ஆண்டின் மூலதனச் செலவின விகிதமான (1.79%) அளவை 2023 முதல் 2026- ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நீட்டித்திருந்தால், ஏறத்தாழ 28,217 கோடி ரூபாய் மூலதனச் செலவினம் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும். 28,217 கோடி ரூபாய் என்பது சுமார் 1,000 கிலோமீட்டர் விரைவுச்சாலை அல்லது 30 பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகள் அல்லது 2,000 பள்ளிக் கட்டடங்களை உருவாக்கும்

### மூலதனச் செலவினம் / மொத்த செலவினம்: 11.8 சதவீதம்

- குஜராத்: 26.8% /கர்நாடகா: 17.0%/ மகாராஷ்டிரா: 13.0% / தமிழ்நாடு: 11.8%
- தமிழ்நாடு கடைசி இடத்தில் உள்ளது.


### போட்டிச் சூழ்நிலையில் பாதிப்பு மேலும் தீவிரமடைகிறது

- தனியார் முதலீடு பொதுக் கட்டமைப்பு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

# நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறையுடன் இணக்கம் – இலக்கு திருத்தப்பட்டது, என்றுமே இலக்கு எய்தப்படவில்லை

கோவிட் பெருந்தொற்றுக்கு பிந்தைய ஒவ்வொரு ஆண்டிலும் நிதிப் பற்றாக்குறை நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமைச் சட்டத்தில் உள்ள 3% வரம்பிற்கு மேலேயே உள்ளது | 2025–26–ஆம் ஆண்டில் (மு.நி.க.) 1,33,208 கோடி ரூபாய் – இதுவே இதுவரை பதிவானதில் மிக அதிகமான பற்றாக்குறை அளவாகும்.

**நிதிப் பற்றாக்குறை / மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (%) மற்றும் நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமை சட்டத்தின்படி உச்ச வரம்பு – ஒப்பீடு**




**தமிழ்நாடு நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமைச் சட்டம் – திருத்தங்கள்**

| திருத்தம் | நிதிப் பற்றாக்குறை இலக்கு |
|---|---|
| 2003 (முதன்மை) | 2006-07 |
| 2005 | 2007-08 |
| 2010 | 2011-12 |
| 2017 | 2017-18 |
| 2021 | 2023-24 |
| **2025 (தற்போது)** | **2025–26 வரம்பு மீறப்பட்டது** |

**இணை மாநிலங்களின் நிதி பற்றாக்குறை (2025–26 திருத்த மதிப்பீடு)**


- குஜராத்: 1.9% | மகாராஷ்டிரா: 3% | கர்நாடகா: 2.8% | தமிழ்நாடு: 3.8% (மு.நி.க.) – தற்பொழுது பஞ்சாப் (4.2%) மற்றும் கேரளா (3.8%) போன்ற நிதிச்சுமைக்கு பெயர்பெற்ற மாநிலங்களுடன் ஒப்பிடத்தக்க நிலையில் உள்ளது.

**வரவு–செலவுத் திட்ட நம்பகத்தன்மை – தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டது.**

- 2021–22–ஆம் ஆண்டு முதல் வருவாய்ப் பற்றாக்குறையின் இறுதிக் கணக்கு, வரவு–செலவு திட்ட மதிப்பீட்டை விட பலமுறை கணிசமாக அதிகரித்துள்ளது. இதை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை தொடர்பான கவலையாக தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்டமன்றத்திற்கு தொடர்ந்து சாதகமான, மிகைப்படுத்தப்பட்ட கணிப்புகளே தெரிவிக்கப்பட்டு வருகிறது.

# ஆய்வு முடிவு 6: நிபந்தனை பொறுப்புகள் – மறைமுக கடன்

**வரவு–செலவுத் திட்டத்தில் வராத அரசு பொதுத் துறை நிறுவனங்களின் கடன்களையும் சேர்த்து மொத்தக் கடன் ஏறத்தாழ 13.18 இலட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது | அரசு உத்தரவாதங்கள் 1,79,782 கோடி ரூபாய் (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 5.1 சதவீதம்) – 2021 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்த 65,659 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில் சுமார் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.**




## தமிழ்நாடு மின் வாரியக் குழுமம் : 2,47,130 கோடி ரூபாய் கடன் + 1,82,361 கோடி ரூபாய் திரண்ட இழப்புகள்

- தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்: 1,07,365 கோடி ரூபாய் | தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம்: 1,03,128 கோடி ரூபாய் | தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்: 5,672 கோடி ரூபாய் | தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்: 30,965 கோடி ரூபாய். தமிழ்நாடு அரசின் ஆதரவு 2021–26: மொத்தம் 1,45,185 கோடி ரூபாய் (2025–26 ஆம் ஆண்டில் மட்டும் 33,478 கோடி ரூபாய்).
- உச்சநீதிமன்ற உத்தரவு: 2026–27 முதல் 2030–31 வரை ஆண்டுதோறும் கூடுதலாக 11,800 கோடி ரூபாய் வழங்க வேண்டியுள்ளது.

## மாநில போக்குவரத்துக் கழகங்கள்(8 நிறுவனங்கள்)

மொத்த இழப்புகள்: 72,667 கோடி ரூபாய் | நிலுவை பொறுப்புகள்: 61,642 கோடி ரூபாய். ஒரு கிலோமீட்டருக்கான செலவு 78.81 ரூபாயாகவும், வருவாய் 25.97 ரூபாயாகவும் உள்ளது – கிலோமீட்டருக்கு 52.84 ரூபாய் என்ற கட்டமைப்பு இடைவெளி நிலவுகிறது. 2020–21 முதல் 2025–26 வரை மொத்த செலவுகள் இருமடங்காக உயர்ந்துள்ளன: அதே சமயம் 2019–20 நிலையை ஒப்பிடுகையில் செயல்பாட்டு வருவாய் 13 சதவீதம் குறைந்துள்ளது.


## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: ஒத்திவைக்கப்பட்ட மாநிலப் பொறுப்பு

- நடப்பு மூலதனக் கடன்: 27,181 கோடி ரூபாய் (அரசு உத்தரவாதக் கடன்கள் ஆண்டுதோறும், புதுப்பிக்கக்கூடிய குறுகிய கால கடன்கள் என அனைத்தும்).

# உண்மையான கடன் – 13.18 இலட்சம் கோடி ரூபாய்

10 இலட்சம் கோடி ரூபாய் என்ற கணக்கில் உள்ளடங்காதவை | பொதுத்துறை நிறுவனக் கடன்: 3,18,176 கோடி ரூபாய்

### ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புகள் (ரூ. இலட்சம் கோடியில்)




**மொத்த கடன் சுமை – 13.18 இலட்சம் கோடி ரூபாய்**

### முதன்மை கடன் மற்றும் உண்மையான கடன்

- மாநில அரசின் கடன்: 10.00 இலட்சம் கோடி ரூபாய் (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 28.3 சதவீதம்)
- பொதுத்துறை நிறுவன நிலுவைக் கடன் : 3,18,176 கோடி ரூபாய் (31.3.2026 அன்று)
- மொத்த கடன் பொறுப்பு: ஏறத்தாழ 13.18 இலட்சம் கோடி ரூபாய். இந்த இடைவெளி வரவு–செலவுத் திட்டத்தில் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. இது வெளிப்படைத்தன்மை தொடர்பான கவலையாக குறிப்பிடப்படுகிறது.

### பொதுத்துறை நிறுவனக் கடன் விவரம் – 31.3.2026 இன்படி நிலவரம்

- தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்: 1,07,365 கோடி ரூபாய் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம்: 1,03,128 கோடி ரூபாய் / தமிழ்நாடு பசுமை எரிசக்தி நிறுவனம்: 5,672 கோடி ரூபாய் / தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்: 30,965 கோடி ரூபாய் / மாநில போக்குவரத்து கழகங்கள் (STUs): 43,865 கோடி ரூபாய் / தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: 27,181 கோடி ரூபாய் மொத்தம்: 3,18,176 கோடி ரூபாய்

### குடிநீர் வழங்கல் வாரியங்கள் – திரள் இழப்பு 7,776 கோடி ரூபாய்

- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்: 4,961 கோடி ரூபாய் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்: 2,815 கோடி ரூபாய். இயக்கச் செலவுகளை முழுமையாக மீட்க முடியாத நிலை, தொடர்ச்சியான கடன் பெறுதலுக்கு வழிவகுத்து, கடன் சுமை அதிகரிப்பதால் தொடர்ச்சியான நிதி இழப்புகளை உருவாக்கும் சுழற்சி நிலை ஏற்பட்டுள்ளது.


### உத்தரவாதக் கடன் மும்மடங்கு உயர்வு: 65,659 கோடி ரூபாயிலிருந்து 1,79,782 கோடி ரூபாயாக உயர்வு

- 2021 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 65,659 கோடி ரூபாயாக இருந்த அரசின் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் 2026 மார்ச் மாத நிலவரப்படி 1,79,782 கோடி ரூபாயாக உயர்ந்து, ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகரித்துள்ளன. இதனுடன், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் உத்தரவாதங்களின் விகிதம் 3.7 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

# மக்கள் தொகை பரிமாணம் – பொருளாதாரத்தில் முன்னேற்றமடையும் முன்னரே முதுமையடையும் நிலை

**தமிழ்நாடு–மிக அதிவேகமாக முதியோர் விகிதம் அதிகரிக்கும் பெரிய மாநிலம் / முதியோர்களின் பங்கு 10.6 (2011) சதவீதத்திலிருந்து 2031 ஆம் ஆண்டிற்குள் 18.2 சதவீதமாக உயரும் – இது இந்தியாவிலேயே அதிகளவாக 71.7 சதவீத வளர்ச்சி விகிதமாகும்.**

**முதியோர் மக்கள்தொகையின் வளர்ச்சி விகிதம் 2011–2031 (%) – தமிழ்நாடு அதிவேக வளர்ச்சி**




## முதியோர் விகிதம் மிக அதிவேகமாக அதிகரிக்கும் பெரிய மாநிலம் :

- முதியோர்களின் பங்கு 10.6 (2011) சதவீதத்திலிருந்து 2031 ஆம் ஆண்டிற்குள் 18.2 சதவீதமாக உயரும் – இது 71.7சதவீத வளர்ச்சி விகிதமாகும். இந்தியாவின் பெரிய மாநிலங்களில் இதுவே மிக அதிகளவாகும். 2100–க்குள் தேசிய சராசரி ஏறத்தாழ 27 சதவீதமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 48 சதவீதம் பேர் முதியோராக இருப்பர். சார்ந்து வாழும் முதியோர் விகிதம் 20.6 (2021) சதவீதத்திலிருந்து 32.7 (2036) சதவீதமாக உயரும்.

## குறைந்து வரும் உழைக்கும் வயதுடையோர்

- உழைக்கும் வயதுடையோர் மக்கள் தொகை (15–59 ஆண்டுகள்) 2021 இல் ஏறத்தாழ 66.4 சதவீதமாக உச்சத்தை எட்டியது. இது, 2036 ஆம் ஆண்டிற்குள் 63.6 சதவீதமாகக் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. சமூகக் கடமைகள் அதிகரிக்கும் அதே வேளையில், குறைவான வரி செலுத்துவோர் அதிகளவிலான சார்ந்திருப்பவர்களை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்: இது, வரி செலுத்துவோர் எண்ணிக்கையை பெருமளவில் குறைக்கிறது.

## கத்தரிக்கோல் விளைவு

- குறைந்து வரும் வருவாய் அடித்தளம் மற்றும் விரிவடைந்து வரும் சமூகப் பாதுகாப்பு/சுகாதாரக் கடமைகள் ஆகியவை இணைந்து, அமைப்புசார் பற்றாக்குறையை மேலும் விரிவுபடுத்துகின்றன. இப்பற்றாக்குறையைக் கடன் மூலம் நிரப்பும்போது, வட்டிச் சுமை அதனை இன்னும் அதிகமாக்குகிறது. இதுவே ஒரு மாநிலம் கடன் வலையில் சிக்குவதற்கான காரணமாக அமைகிறது. இந்நிலையிலிருந்து மீள்வதற்கான தமிழ்நாட்டிற்கான கால அவகாசம் முன்னெப்போதையும் விட தற்போது மிகவும் குறைவாக உள்ளது.

## அவசர நிலையின் முக்கியத்துவம்

- மக்கள் தொகை வகையில் வலுவாக இருக்கும்போதே நிதிச் சீரமைப்பை மேற்கொள்வதற்கான கால அவகாசம் ஒவ்வோராண்டும் குறைந்து வருகிறது. காலதாமதம் இச்சிக்கலை மேலும் பலமடங்காக அதிகரிக்கும். இதன் ஆபத்து: தமிழ்நாடு பொருளாதார ரீதியாகத் தற்சார்பு அடைவதற்கு முன்னரே அதிகளவு முதியோரைக் கொண்ட மாநிலமாக மாறிவிடும்.

# கோவிட் பெருந்தொற்றுக்குப் பிந்தைய நிதி சீரமைப்பில் தோல்வி – கொள்கை ரீதியான நான்கு காரணங்கள்

இணை மாநிலங்கள் சீரமைத்து விட்டன: தமிழ்நாட்டின் நிலையில் பின்னடைவு. இதற்குக் காரணமான ஒவ்வொரு முக்கியக் காரணியும் முழுமையாக மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் உள்ளவையே ஆகும்.

## 01 கூடுதல் வருவாய் ஆதாரங்களின்றி புதிய நிதிப் பொறுப்புகளை உருவாக்குதல்

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் + கூட்டுறவுப் பயிர்க்கடன் தள்ளுபடி + மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் + உயர்கல்விக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் + மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு. 2025–26 நிதியாண்டில் இவற்றிற்கான ஆண்டுத் தொடர் செலவினம் 25,000 கோடி ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதற்கு இணையாக எவ்வித வருவாய்ப் பெருக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## 02 சொந்த வரிச் சீர்திருத்தங்களை ஒத்தி வைத்தல் – இழப்புகளும் ஊழலும்

சரக்கு மற்றும் சேவை வரி (GST) இழப்பீடு தொகை ஒன்றிய அரசால் நிறுத்தப்படும் என்பது 2017 ஆம் ஆண்டிலிருந்தே தெரிந்திருந்தும், அதற்கேற்ப வருவாய் ஆதாரங்களை விரிவுபடுத்துவதற்கான எவ்வித ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. வணிக வரித் துறையில் நிலவும் குறைபாடுகளால் நடைமுறை வரி விதிப்புகளும், வருவாய் இழப்புகளும் ஏற்பட்டன. முத்திரைக் கட்டணத்திற்கான வழிகாட்டி மதிப்புகள் சந்தை மதிப்பை விடக் குறைவாகவே வைக்கப்பட்டுள்ளன. ஆயத்தீர்வை மூலமாக கிடைக்கும் வருவாயும் இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. கனிமவளத் துறையில் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு மற்றும் ஊழல் மக்களுக்கு தெரிந்ததே.

## 03 மூலதன உருவாக்க இழப்பு

மாநில ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மூலதனச் செலவினத்தின் விகிதம் 1.79% (2021–22) இலிருந்து 1.44% (2025–26) ஆகக் குறைந்துள்ளது – இது இணை மாநிலங்களை விட மிகவும் குறைவானதாகும். 2023–26 காலகட்டத்தில் தமிழ்நாடு இழந்த மூலதனச் செலவின மதிப்பு: சுமார் 28,217 கோடி ரூபாயாகும்.

## 04 பொதுத்துறை நிறுவனங்களின் அமைப்பியல் சிக்கல்கள் சரிசெய்யப்படாமை

மின்சாரத் துறை : சராசரி விநியோகச் செலவிற்கும் சராசரி வருவாய்க்கும் இடையேயான இடைவெளியை நிரப்ப தமிழக அரசு 1,45,185 கோடி ரூபாய் நிதியுதவி/மானியங்களை (2021–26) வழங்க வேண்டியிருந்தது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்: கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டாமல் செலவினங்களை இரு மடங்காக உயர்த்தியுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: நடைமுறை மூலதனக் கடன் 17,500 கோடி ரூபாயிலிருந்து 27,181 கோடி ரூபாயாக உயர்ந்தது.

அரசின் நிலுவை உத்தரவாதங்கள் 65,659 கோடி ரூபாயிலிருந்து 1,79,782 கோடி ரூபாயாக மும்மடங்காக அதிகரித்துள்ளது.

# தமிழ்நாடு மற்றும் இணை மாநிலங்கள் – ஓர் ஒப்பீட்டுப்பார்வை

**முக்கிய நிதிக் குறியீடுகளை பிற இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், பலவற்றில் தமிழ்நாடு பின்தங்கியே உள்ளது.**

| குறியீடு | தமிழ்நாடு | கர்நாடகா | மகாராஷ்டிரா | குஜராத் |
|---|---|---|---|---|
| கடன் / மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (Outstanding Liabilities / GSDP) | 28.3% ✗ | 23.4% | 19.7% | 17.6% |
| நிதிப்பற்றாகுறை / மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (Fiscal Deficit / GSDP) | -3.8% ✗ | –2.8% | –3.0% | –1.9% |
| வருவாய் கணக்கு / மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (Revenue Account / GSDP) | –2.2% ✗ | –0.8% | –0.7% | +0.8% |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் / மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (SOTR / GSDP) | 5.4% | ~5.9% | ~8.0% | ~5.2% ✗ |
| வட்டி / மொத்த வருவாய் வரவுகள் (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (Interest / TRR) | 22.8% ✗ | ~16.4% | ~10.3% | ~12.0% |
| பொறுப்பேற்றச் செலவினம் / மொத்த வருவாய் வரவுகள் (2024–25) (Committed Expenditure / TRR) | 61.7% ✗ | 44.6% | 49.3% | 44.6% |
| மூலதன செலவினம் / மொத்தச் செலவினம் (2025–26 திருத்த மதிப்பீடுகள்) (Capital Expenditure / Total Expenditure) | 11.8% ✗ | 17.0% | 13.0% | 26.8% |

*தமிழ் நாடு – 2025-26 மு.நி.க.*

# 2026-27 ஆம் நிதியாண்டின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் - ஓர் ஆய்வு

**2026-27 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் உள்ளது | தற்போதுள்ள சூழல் தொடர்ந்தால், முன்வைக்கப்பட்டுள்ளதை விட மிக அதிகமான பற்றாக்குறைகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது**

## 2026-27 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திற்கும் தற்போதுள்ள சூழ்நிலைக்குமான ஓர் ஒப்பீடு

| பொருண்மை | இடைக்கால வரவு- செலவுத் திட்டம் 2026-27 | தற்போதுள்ள சூழல் | வேறுபாடு | சிக்கல் |
|---|---|---|---|---|
| மாநில சொந்த வரி வருவாய் | ரூ.2,29,579 கோடி (19% வளர்ச்சி) | ~ரூ.2,15,600 கோடி (12% வளர்ச்சி) | ~ரூ.14,000 கோடி | கடந்த 2 ஆண்டு வளர்ச்சி: 6.8% மற்றும் 7.7%. நடப்பாண்டில் 19% அளவுக்கு மிகைப்படுத்தப்பட்ட வளர்ச்சி கணிப்பு |
| உதவித்தொகைகள் மற்றும் நிதிமாற்றங்கள் | ரூ.1,56,108 கோடி | ~ரூ.1,84,000+ கோடி | ~ரூ.27,800 கோடி | தமிழ்நாடு மின் பகிர்மானக் கழக இழப்பீட்டு நிதி (ஆண்டுக்கு சுமார் ரூ.16,000 கோடி) முழுமையாக மதிப்பிடப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் ஒழுங்குமுறை சொத்து மீட்பு (ஆண்டுக்கு ரூ.11,800 கோடி) தொகையும் விடுபட்டுள்ளது. |
| வருவாய் பற்றாக்குறை | ரூ.48,696 கோடி | ~ரூ.90,500 கோடி | ~ரூ.41,800 கோடி | ஏறத்தாழ 86 சதவீதம் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மையான பற்றாக்குறை, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளவற்றிற்கு ஏறத்தாழ இருமடங்காக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. |
| நிதிப் பற்றாக்குறை | ரூ.1,21,949 கோடி (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3%) | ~ரூ.1,63,750 கோடி (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ~4.3%) | ~ரூ.41,800 கோடி | அதிகபட்ச கடன் வரம்பு சுமார் ரூ.1,52,144 கோடி. இது புதிய திட்டங்களை அறிவிப்பதற்கு முன்னதாகவே ஏறத்தாழ ரூ11,600 கோடிக்கும் அதிகமான நிதிப் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. |

கடன் உச்சவரம்பு: இயல்பான நிகர கடன் உச்சவரம்பு ரூ.1,14,981 கோடி + மூலதன முதலீட்டிற்காக மாநிலங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகை ரூ.7,000 கோடி + புதிய தேசிய ஓய்வூதியத் திட்டம் / தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ரூ.11,000 கோடி + மின் துறை சீர்திருத்தம் 0.5% ரூ.19,163 கோடி = அதிகபட்சம் ~ரூ.1,52,144 கோடி. இந்த அதிகபட்ச அளவு கூட, பொறுப்பேற்கப்பட்ட செலவினங்களை முழுமையாக ஈடுசெய்யப் போதுமானதாக இல்லை. இதனால், அரசு மக்களுக்காக செயல்படுத்த கருதியுள்ள புதிய திட்டங்களுக்கு மிகக் குறைவான நிதி மட்டுமே எஞ்சுகிறது.

# ஆறு முக்கிய ஆய்வு முடிவுகள்– ஒட்டுமொத்த விவரம்

**ஒரே சிக்கலின் ஒன்றையொன்று தீவிரப்படுத்தும் வெவ்வேறு கூறுகள் | தலைமுறை தலைமுறையாகத் தொடரும் சுமை இப்போது தவிர்க்க முடியாததாகிவிட்டது.**

### 1 ஐந்தாண்டுகளில் கடன் இருமடங்காகியுள்ளது

- ரூ.5.13 இலட்சம் கோடி → ரூ.10.00 இலட்சம் கோடி. கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 14.3%, இது பெயரளவு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட வேகமானது. கோவிட் பெருந்தொற்று உச்சகாலகட்டத்திலிருந்து சீரமைப்பு இல்லை. தனிநபர் கடன் பொறுப்பு ரூ.1,28,934. இது இணை மாநிலங்களை விட மிகவும் அதிகம். மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 28.3 சதவீதம்

### 2 மூலதனச் செலவினத்தை விட வட்டிச் செலவுகள் அதிகமாக உள்ளது

- ரூ.67,050 கோடி வட்டி மற்றும் ரூ.50,911 கோடி மூலதனச் செலவினம் ஓர் ஒப்பீடு – விகிதம் 1.32:1. வட்டியானது வருவாய் வரவுகளில் 22.8% மற்றும் சொந்த வரி வருவாயில் 34.8%–ஐ எடுத்துக்கொள்கிறது. எதிர்கால சொத்துக்களை உருவாக்குவதற்கான முதலீட்டை விட கடந்தகாலக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கே அதிகம் செலவிடப்படுகிறது. 2017–18 முதல் இந்த நிலை மாற்றமடைந்து வருவதோடு விரிவடைந்து வருகிறது.

### 3 கட்டமைப்பு சார்ந்த வருவாய் பற்றாக்குறை – முன்னெப்போதும் இல்லாத உச்சம்

- ரூ.78,324 கோடி (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2.22%) – கோவிட் பெருந்தொற்று ஆண்டின் போதிருந்த ரூ.62,326 கோடியைத் தாண்டி, முன்னெப்போதும் இல்லாத உச்சம். 2013–14 முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வருகிறது. அன்றாட நுகர்வுக்கு நிதியளிக்க அரசு கடன் வாங்குகிறது.

### 4 சொந்த வரி முயற்சி தோல்வியடைதல்

- மாநிலத்தின் சொந்த வரி வருவாய்/மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (SoTR/GSDP) 5.45% – அண்மைக் காலங்களில் மிகக் குறைவான ஒன்று. இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் வேகமான சறுக்கல். இது வருவாய் இழப்பு, ஊழல் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட சீர்திருத்தங்களால் ஏற்பட்டது – கட்டமைப்பு சார்ந்த பொருளாதாரப் பின்னடைவால் ஏற்பட்டது அல்ல.

### 5 பொறுப்பேற்றச் செலவினம் வளர்ச்சியை முடக்குகிறது

- வருவாயில் ~64% முன்னரே ஒதுக்கப்பட்டுள்ளது (இணை மாநிலங்கள்: 44–50%). மூலதனச் செலவினம் மொத்தச் செலவில் 11.8% – இது இணை மாநிலங்களிலேயே மிகக் குறைவானதாகும். வருவாயில் ~87% முன்கூட்டியே ஒதுக்கப்படுகிறது. உண்மையான விருப்பச் செலவின வாய்ப்பு: வெறும் ~13% மட்டுமே. கடன் வாங்காமல் புதிய திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பில்லை.

### 6 உண்மையான கடன்: ரூ.13.18 இலட்சம் கோடி

- மாநில அரசின் கடன்: ரூ.10.00 இலட்சம் கோடி. பொதுத்துறை நிறுவனக் கடன்: ரூ.3.18 இலட்சம் கோடி. மொத்தம்: ~ரூ.13.18 இலட்சம் கோடி. தமிழ்நாடு மின் வாரியக் குழுமம் மட்டும்: ரூ.2,47,130 கோடி கடன் + ரூ.1,82,361 கோடி திரள் இழப்புகள். உத்தரவாதங்கள் ரூ.65,659 கோடியிலிருந்து ரூ.1,79,782 கோடியாக, ஏறத்தாழ மும்மடங்காக அதிகரித்துள்ளன.

# இனி வருங்காலங்கள் – சவாலானவை, இருப்பினும் நம்பிக்கையிழக்க வேண்டியவையல்ல

**வருவாய் திரட்டலில் நிலையான முயற்சி, செலவினம் மேற்கொள்வதில் திறன், பொதுத்துறை நிறுவன சீர்திருத்தம் மற்றும் தூய்மையான, ஊழலற்ற ஆட்சி**

### 1 ஊழலற்ற நிர்வாகத்தின் மூலம் வருவாய் இழப்புகளை சரிசெய்தல்

- வணிக வரிகள் (ஜிஎஸ்டி), முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு, ஆயத்தீர்வை, மற்றும் கனிமவளம் ஆகியவற்றில் உள்ள அமைப்பு ரீதியான ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேட்டினால் கணிசமான வருவாய் இழக்கப்பட்டுள்ளது. ஊழலற்ற நிர்வாகம் மூலம் நடப்பு ஆண்டில் 20,000 கோடி ரூபாய் வரை கூடுதல் நிதி வரவை ஏற்படுத்தலாம் என்று கணிப்பு. நிதி இழப்புகளை சரிசெய்தாலே சொந்த வரி ஈட்டும் திறன் பெருமளவு மேம்படும். கூடுதல் வருவாய் புதிய திட்டங்களைச் செயல்படுத்த வழிவகை செய்யும்.

### 2 அரசு கொள்முதலின் செலவைக் குறைத்தல்

- பொதுக் கொள்முதல் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகளில் ஏற்படும் நிதி இழப்புகளை குறைப்பதன் மூலம் பெருமளவிலான கூடுதல் நிதியைப் பெறலாம். மேம்பட்ட ஒப்பந்த மேலாண்மை, போட்டித்தன்மை வாய்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரல் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவை, செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாய்க்கும் கூடுதல் மதிப்பைப் பெற வழிவகை செய்யும்.

### 3 பொதுத்துறை நிறுவன சீர்திருத்தம் – கட்டமைப்பு சார்ந்தது, மானியம் அல்ல

- மின்சாரம் (தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்): நிலையான கட்டண முறை, செயல்பாட்டுத் திறன்.
- மாநிலப் போக்குவரத்து கழகங்கள்: வழித்தட இயங்குத் திறன், பயணக் கட்டணம் அல்லாத வருவாய்.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: கொள்முதல் சீர்திருத்தம், குறித்த நேரத்தில் மானியங்களை விடுவித்தல், கட்டமைப்பு சீர்திருத்தம், கடனளவு மற்றும் நிலுவை உத்தரவாதங்களைக் குறைக்க வழிவகை செய்யும்.

### 4 தற்போதுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வருவாய் திரட்டல்

- சந்தை மதிப்புடன் வழிகாட்டுதல் மதிப்பைச் சீரமைத்தல் (முத்திரைத் தாள் கட்டணம்). விரிவான ஆயத்தீர்வை உரிமக் கட்டமைப்பு.
- கனிமவளங்கள்: நிர்வாகத்தை நவீனமயமாக்குதல், இழப்பு ஏற்படும் வழிகளுக்கு தீர்வு காணுதல். முழுமையாக அரசின் அதிகார வரம்பிற்குள் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளுதல். புதிய வரிகளுக்கான தேவையில்லை, குடிமக்களுக்குக் கூடுதல் வரிச்சுமை இல்லை.

### 5 செலவினத் தரம் – நுகர்வை விட மூலதனம்

- வருவாய் செலவினங்களிலிருந்து மூலதனச் செலவினங்களுக்கு படிப்படியாக மறு சமநிலைப்படுத்துதல். 2036 ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய தனியார் முதலீட்டை ஈர்க்கும் உட்கட்டமைப்பை உருவாக்குவதில் மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்படும்.

### 6 நேர்மையான, நம்பகமான வரவு–செலவுத் திட்டமிடல்

- தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் சுட்டிக்காட்டப்பட்ட வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கும், இறுதிக் கணக்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறைக்கவும், முதலீட்டாளர்கள், தரமதிப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கவும், வெளிப்படையான நிதிநிலை அறிக்கையானது தேவைப்படுகிறது. நம்பிக்கையே ஒரு நிதிச் சொத்தாகும்.

# இந்த வெள்ளை அறிக்கையின் நோக்கம்

### வெளிப்படைத்தன்மை

தமிழ்நாடு அரசின் நிதிநிலைமை குறித்த துல்லியமான, ஆதார அடிப்படையிலான அறிக்கையை முழு நேர்மையுடன் சமர்ப்பிப்பதன் மூலம், அரசு, சட்டமன்றம் மற்றும் மக்கள், நிதி நிலைமை குறித்த முழுமையாக தெரிந்து நிதி தொடர்பான கருத்து பரிமாற்றங்களுக்கு வழிவகை செய்தல்.

### பொறுப்புடைமை

காணப்படும் சரிவு, அரசு அதிகார வரம்பிற்குள் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளால் ஏற்பட்ட கட்டமைப்பு சார்ந்த ஒன்றாகும். இதற்கான நான்கு காரணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன: வருவாய் ஈடுசெய்யப்படாமல் ஏற்கப்பட்ட பொறுப்புகள், ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு நடவடிக்கைகள், விட்டுவிடப்பட்ட மூலதனச் செலவினங்கள், மற்றும் சீர்திருத்தப்படாத பொதுத்துறை நிறுவனங்கள்.

### சீர்திருத்தம்

இழப்புகளைத் தடுப்பதன் மூலம் வருவாய் திரட்டுதல், செலவினங்களின் தரம், பொதுத்துறை நிறுவனங்களின் சீர்திருத்தம், கடன் மேலாண்மை, தூய்மையான, ஊழலற்ற ஆளுமை ஆகியவற்றின் மூலம் இந்த நிலைமையை வெகு விரைவில் சீர் செய்ய முடியும்.

**ரூ.10.00 இலட்சம் கோடி நேரடிக் கடன்**

**ரூ.78,324 கோடி வருவாய் பற்றாக்குறை**

**ரூ.1,28,934 தனி நபர் கடன் பொறுப்புகள்**

**ரூ.13.18 இலட்சம் கோடி ஒட்டுமொத்த நிதிச் சுமை**

*"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு"* *– திருக்குறள் 595*

நீர்ப் பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினதாகும். மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு